# தாயக வலைப் பந்தாட்ட சுற்றுலாக் குழு - ஐ.இ

# 2003

# North & East Net Ball Team Tour - UK

# 2003



**தமிழீழ விடுதலைப் புலிகளின்**
**விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்**
**திரு கி.பாப்பா அவர்களின் செய்தி**



தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அதன் மீது ஈழத்தமிழரின் சம வாழ்வுக்கான தீர்வைத் தேடும் ஒரு கால கட்டத்தில் தமிழிர் தாயகத்திலிருந்து முதன்முறையாக "தாயக வலைப்பந்தாட்ட அணி" ஒன்று தாயக அடையாளத்துடன் சர்வதேச அரங்கிற்குள் பிரவேசிக்கின்றது என்பது எமது போராட்டத்தின் பலமான ஒரு அம்சமாகவே அமைகிகின்றது.

ஈழத்தமிழரின் தேசிய அடையாளத்தில் விளையாட்டின் பங்களிப்பும், உயர்வான ஒரு இடத்தில் இடம்பெற வேண்டும் என்பதே தமிழீழ விளையாட்டுத் துறையின் நோக்காக அமைகின்றது. இந்த நோக்கிலேயே அதன் பணிகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த நோக்கை அடைவதில் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளின் பங்களிப்பு என்பது அளப்பரியது. இதன் அடையாளமாகவே எமது தாயக வலைப்பந்தாட்ட அணியின் ஐக்கிய இராட்சிய விஜயம் அமைகிறது. கடந்த காலங்களில் போரும் பொருண்மிய தடையும், ஏற்படுத்திய பின்னடைவுகளில் இருந்து எமது இளைய தலைமுறையினர் இன்னும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. இவர்களின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும், உங்கள் பங்களிப்பு எப்போதும் பேருதவியாக இருக்கும்

வீரமும் விவேகமும் நிறைந்த ஒரு தலைமுறையாக எமது இனம் எழுச்சி கொள்ள தாயகத்து மக்களும் தாய் நிலத்தில் வேர்களைப் பதித்த புலம்பெயர்ந்த உறவுகளின் சங்கமிப்பும், எப்போதும் பிரிக்கப்பட முடியாப் பிணைப்பாக இருக்கவேண்டுமென்று விரும்புகின்றேன்.

கி.பாப்பா
பொறுப்பாளர்
தமிழீழ விளையாட்டுத் துறை
தமிழீழம்

## இணைப்பாளரின் செய்தி



எமது தாயகத்திலிருந்து வலைப்பந்தாட்ட அணியினர் முதற் தடவையாக வெளிநாடு சென்று போட்டியிடவுள்ளதையிட்டு நான் பெருமையும் மகிழ்வும் அடைகின்றேன். ஏனெனில் முப்பது வருடங்களுக்கு மேலாக எமது உரிமைகள் மறுக்கப்பட்ட போதிலும் அதற்காகப் பல துன்ப துயரங்களுக்கு எமது வீரர்கள் முகம் கொடுத்து வந்தார்கள். இருப்பினும் விளையாட்டுத்துறையில் எமது வீரர்கள் நீண்டகாலமாக எதுவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் வாழ்ந்து வந்துள்ளார்கள். நாட்டின் தேசியம், இறைமை என்பவற்றிற்கு தடைக் கற்களாகக் காணப்படுகின்ற போர்ச்சூழல் ஓய்ந்துள்ள நிலையிலும், சமாதானத்திற்கான இக்காலகட்டத்திலும் தாயகத்தின் விளையாட்டுத் துறையினை வளர்த்தெடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகளின் அனுசரணையிலும் அவர்களின் எதிர்பார்ப்பிலும் எமது வலைப்பந்தாட்ட அணி, தாய்நாடு கடந்து சென்று தாய்நாட்டு வீரர்களின் விளையாட்டுத் திறனையும்வெளியுலகத் திற்குக் காட்டும் ஒரு களமாக அமைந்ததையுமிட்டு நான் நிறைவடை கின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வணிகளை உருவாக்கிப் பல சிரமங்களுக்கு மத்தியில் அயராமல் உழைத்த பயிற்றுவிப்பாளர்கள், ஒருங்கமைப்பாளர்கள், மற்றும் பல உதவித்திட்டங்களை வழங்கியவர் களுக்கும், பெருந்தொகையான முதலீட்டினைச் செலவிட்டு நீண்ட காலமாக போர்ச்சுழலுக்குள் வாழ்ந்து அடக்குமுறைகளை உடைத்தெறிந்து தமிழன் என்ற தன்மானத்தையும் வீரத்தினையும் உருவாக்கிய உலகில் புதிய சரிதம் எழுதிய எமது உறவுகளை இப்போட்டியில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்த புலம்பெயர்ந்து

வாழும் எம் உறவுகளுக்கும் நாம் என்றென்றும் நன்றிக்கடன் உடையவர்களாக உள்ளோம். எனவே எதுவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது தாயக உறவுகளினட விளையாட்டுத் துறையின் வளர்ச்சியை ஏனைய நாடுகளைப்போல் விரைவில் சர்வதேச மட்டத்தினை துறை சார்ந்த அனைவரும் உழைக்க வேண்டுமென்பதை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

அ.இன்பன்

இணைப்பாளர்

தமிழீழ விளையாட்டுத்துறை

தமிழீழம்

---



## தொகுப்பாசிரியரின் செய்தி

புலம்பெயர்ந்த வாழ்விலும் தமது அடையாளங்களை இழக்காத இனங்கள் உலகில் இரண்டு உண்டு. ஒன்று யூத இனம், மற்றையது ஈழத்தமிழினம். ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமது தனித்துவ அடையாளங்களை இழக்காது தாயகம் நோக்கிய பயணத்தில் வெற்றி கண்டவர்கள் யூதர்கள். இன்று ஈழத்தமிழர்களும் பல்வேறு திக்குகளில் புலம்பெயர்ந்து புதிய வாழ்வியலுக்குள் மூழ்கிப்போயுள்ள போதும் தமது அடையாளங்களை இழக்காது பேணி வருவதுடன் தமது தேசத்தின் விடியலுக்கான கடமையும் தமது தோள்களில் சுமக்கின்றன.

இந்நிலையில் எமது வலைப்பந்தாட்ட அணி தாயகத்தின் அடையாளத்துடன் ஐரோப்பிய நாட்டுக்கு வருகை தருவது ஒரு திருப்பு முனையாக அமையும் என எதிர்பார்க்கின்றேன். இந்தக் கையேட்டைத் தயாரிப்பதில் துணைபுரிந்த செல்வி சந்திரமதி தவராசா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

அ.அன்ரன் அன்பழகன்

செயலாளர்

தமிழீழ விளையாட்டுக்கழகம்

# வடக்கு கிழக்கு மாகாண வலைப்பந்தாட்டப் பாதையிலே......

தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய வாழ்விடமாக விளங்கி வருகின்றது வடக்கு கிழக்கு மாகாணம். ஏனைய மாகாணங்கள் போல் அல்லாது தனித்துவமான பல, சிறப்புக்களைக் கொண்டுள்ள போதும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த போதும் தனது சிறப்புக்களை இன்னும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது என்றால் அது அம் மண்ணில் வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களது விடாமுயற்சியும் தன் நம்பிக்கையும் ஆகும்.

எம் மக்களது விடா முயற்சிக்கு விளையாட்டுத்துறையும் ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகவே உள்ளது. எதிர்வீரசிங்கம் போன்றவர்கள் இன்னும் இம் மண்ணின் பெருமை கூறுவதற்கு சான்றாக உள்ளார்கள். அதே போல் குழு நிலைப் போட்டிகளிலும் தேசிய அணியில் இடம் பெற்று தம் திறமைகளை வெளிக்கொணர்ந்தவர்களும் உள்ளனர்.

அரசியலில் ஏற்பட்ட மாற்றம் தமிழ் சிங்கள இனத்துவேசமாக மாறிய போது வடக்கு கிழக்கு மாகாணம் ஏனைய மாகாணங்களினைப் போல் அபிவிருத்தி விடயத்தில் மட்டுமல்லாது பல்வேறு விடயங்களிலும் புறக்கணிக்கப்படலாயிற்று. மாவட்டங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே விளையாட்டினை தம்மளவிலேயே மட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலை உருவானது. மாகாணப் போட்டியில் பங்குபற்றுவதற்கான போக்குவரத்து வழி மிகவும் சிக்கலாக இருந்தமையினால் குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்கள் வெளியிடத் தொடர்பாடலுக்கு மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்கின.

தற்போதைய கால கட்டத்தில் இவ்வாறான சூழ் நிலைகளின் இறுக்கம் குறைந்து மக்களது இயல்பு நிலை மீண்டும் கொண்டு வருகின்ற நிலையில் விளையாட்டுத் துறை சார்ந்தவர்களும் மிகுந்த ஆர்வத்துடனும்

உத்வேகத்துடனும் செயற்படத் தொடங்கி உள்ளனர். வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள விளையாட்டுத்துறை சார்ந்தவர்கள், ஆர்வலர்கள் போன்றோரது செயற்பாடுகளுடன் வெளியார் செயற்பாடுகளும் இதற்க்கு முக்கிய உந்து சக்தியாக விளங்குகின்றது.

பல்வேறு விளையாட்டுக்கள் உள்ள போதும் வலைப்பந்தாட்டத்தின் போக்கினையே இங்கு முக்கியமாக பார்க்க உள்ளோம். பல்வேறு காலங்களில் பல்வேறுபட்ட அணி தங்களது திறமையினை வெளிக் கொணர்ந்த போதும் அதன் வளர்ச்சிப் போக்கு பின்னடைந்த நிலையிலேயே இருந்தமையை நாம் காணக்கூடியதாக இருந்தது. இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தில் 2001 ஆண்டு அங்கத்தவராகத் தெரிவான யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி.ஆ. ரதிகலா என்பவர் வடக்கு கிழக்கு மாகாண வலைப்பந்தாட்ட வளர்ச்சிக்கு ஓர் உந்துசக்தியாக செயற்படத் தொடங்கினார். இதன் முதற்கட்டமாக 2001 - 04 - 27, 28ம் திகதிகளில் 5' 7" கொண்ட வீராங்கனைகளிற்கான சுற்றுப் போட்டியில் மன்னார் மட்டக்களப்பு அணிகளைப் பங்கு பற்றச் செய்தார். 2001 - 04 - 10, 11 திகதிகளில் குருநாகலில் நடைபெற்ற வலைப்பந்தாட்டச் சங்க அணிகளிற்கிடையேயான சுற்றுப் போட்டியில் மன்னார் அணியினைப் பங்குபற்றச் செய்தார். இதனைத் தொடர்ந்து 2001 ஒக்டோபர் 06ல் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடுவாகளிற்கான எழுத்துப் பரீட்சையினை நடாத்துவித்தார்.

பயிற்சிகளை ஒழுங்கு படுத்தி ஓர் தெளிவான போக்கினை ஏற்படுத்தும் பொருட்டு 2002 - 02 - 7, 10 வரையான காலப்பகுதியில் வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டு அலுவலர்களில் 57 உறுப்பினர்களிற்கு தேசிய விளையாட்டுக்கள் விஞ்ஞான நிறுவனத்தால் (NISS) நடாத்தப்பட்ட பயிற்சி முகாமானது ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் வடக்கு கிழக்கு மாகாணத்தில் பலமாவட்டங்கிலும் பயிற்சி முகாம்கள் நடாத்தப்பட்டன. முதற்கட்டமாக 2002-03- 20-23ம் திகதிகளில்

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டது. துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இம்முகாமில் 50 பயிற்சியாளர்களும் 108 வீரர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். மத்தியஸ்தர்களிற்கான செய்முறைப் பரீட்சையினையும் நடாத்தி ஓர் இலகுதன்மையினை உருவாக்கினார்.

மன்னார் மாவட்டத்தில் 2002-03-24,25ந் திகதிகளில் நடாத்தப்பட்ட பயிற்சி முகாமில் 80 வீரர்களும் 20 பயிற்று நர்களும் கலந்து பயன் பெற்றனர். 35 மத்தியஸ்தர்களிற்கான பரீட்சையும் நடாத்தப்பட்டது. 2002-05-11,13 காலப்பகுதியில் சிநேக பூர்வ ஆட்டங்களை ஒழுங்கு செய்து மன்னார் அணியினருடன் சிலிங்கோ அணியினரை அழைத்து விளையாட வைத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சித்திரை 19,20ம் திகதிகளில் பயிற்சி முகாம்களை நடாத்தியதுடன் முதன் முறையாக முல்லைத்தீவு வலைப்பந்தாட்டச் சங்கத்தினையும் உருவாக்கி அதன் அடித்தளம் அமைத்தனர். அதேபோல் 21,22ம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்திலும் இவ்வாறானதொரு நிலையினை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

வலைப்பந்தாட்ட சங்கத்தின் செயற்பாடுகள் ஒருபுறம் இருக்க தேசிய விளையாட்டுக்கள் விஞ்ஞான நிறுவனத்தால் (NISS) 2003-03-27,30 வரையான காலப்பகுதியில் வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கபடி, ஹொக்கி, மெய்வல்லுனர் போன்ற நிகழ்ச்சிகளில் ஒரே மைதானத்தில் [சென் ஜோன்ஸ்] ஒரே நேரத்தில் 07ம் திகதி தொடக்கம் 11ம் திகதி வரை நடாத்தப்பட்டன., ஒவ்வொரு விளையாட்டிலும் 25க்கு மேற்பட்ட பயிற்றுவிப்பாளர்களும் வீரர்களும் இணைந்து பயிற்சி பெற்றனர். இதன் மூலம் மெய்வல்லுனர் பயிற்சியில் 4 பேர் தெரிவாகி மேலதிகமாக 10 நாள் பயிற்சி பெறுவதற்கு கொழும்பு சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழாவில் வலைப்பந்தாட்டத்தில் வவுனியா தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள்

பங்குபற்றின. இதே போல் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பந்தாட்டம் போன்ற போட்டிகளும் நடைபெற்றன. வலைப்பந்தாட்டப் போட்டியில் சிறந்த 10 வீராங்கனைகளைத் தெரிவு செய்து இலண்டனில் நடைபெறவுள்ள எட்டாவது தமிழர் தேசிய விளையாட்டு விழாவில் பங்கு பற்றச் செய்வது வடக்கு கிழக்கு மாகாணத்தின் திறமையை வெளிக்கொணர்வதற்கான ஒரு சிறு பொறியாகும்.

திறமையான பல வீரர்கள் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இலைமறைகாயாக உள்ளனர். இவர்களிற்கான சந்தர்ப்பங்களை விளையாட்டுத்துறை சார்ந்த அனைவரும் சரயான முறையில் வழங்கினால் நாளை உலகளவில் தமிழன் என்ற சொல் மீண்டும் ஒலிக்கும்.

# முகாமையாளரின் உள்ளத்திலிருந்து

வடக்கு கிழக்கு மாகாண தேசிய அணி ஒன்று கன்னி முயற்சியியில் காலடி எடுத்து வைத்துள்ளது. இம்முயற்சியில் அணியின் முகாமையாளராகச் செல்வதையிட்டுப் பெருமை அடைகிறேன். இதுவரை காலமும் முடக்கப்பட்டிருந்த விளையாட்டுத்துறை தற்போது புதிய ஒரு உத்வேகத்துடன் செயற்படத் தொடங்கி உள்ளது. அரசியல் காரணங்களினால் தங்களது திறமைகளை வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பங்கள் தடுக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது அவ்வாறானதொரு சூழல் அல்லாது சுமுகமானநிலை தோன்றியுள்ளதனால் பல்வேறு துறைகளின் அபிவிருத்தி போலவே விளையாட்டுத்துறை அபிவிருத்தியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலண்டனில் நடைபெறும் எட்டாவது தமிழ் தேசிய விளையாட்டு விழாவில் எமதணி பங்குபற்றச் செல்வது எமது வளர்ச்சிக்கான ஒரு படிக்கல்லாகும். இவர்களது திறமைகள் வெளிக்கொணர்வதற்கான இச்சந்தர்ப்பமானது ஏனைய விளையாட்டுகளிற்கும் வழங்கப்படவேண்டும் என்பதனை இவ்விடத்தில் கூறிவைக்க விரும்புகிறேன். அத்துடன் எமது தாய்நாட்டின் விளையாட்டுத்துறை மேன்மேலும் வளர்வதற்கு நிதி ஒரு பாரிய பிரச்சனையாக உள்ளது. இதனைப் புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகள் கருத்தில் கொண்டு நிவர்த்தி செய்ய ஆவண செய்ய வேண்டும் என்பதனை இத்தருணத்தில் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் எமது வலைப்பந்தாட்ட அணி இலண்டன் சென்று போட்டியில் கலந்து கொள்ளும் வரை உதவிபுரிந்த ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுவது அணிமுகாமையாளர் என்றரீதியில் எனது கடமையாகும். முதற்தடவையாக இவ்வாறான தொரு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தித் தந்த தமிழீழ விளையாட்டுத்துறையினருக்கு முதற்கண் எனது நன்றியினைக் கூறுகிறேன். எமது அணிக்குப் பயிற்சிகளை வழங்கியது மாத்திரமல்லாது பல்வேறு வழிகளிலும் முன்நின்று அணிசாபான சகல செயற்பாடுகளுக்கும் முகம் கொடுத்து இன்று ஓர் உன்னதநிலையை அடைவதற்கு நேரம் காலம் பாராது அயராது உழைத்த அணியின் பயிற்சியாளரான செல்வி.ஆ.ரதிகலா

(NYSC) அவர்களிற்கும் எனது நன்றிகள் உரித்தாகுக. மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் எமதணி தங்கி பயிற்சியினைப் பெறுவதற்கு பல்வேறு வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும், எனது நன்றிகளைக் கூறுகின்றேன். அத்துடன் இவ்வணியின் பயணத்திற்காக உதவி புரிந்த இலண்டன் தமிழ் தேசிய விளையாட்டு விழா அமைப்பாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இலண்டன் செல்லும் எமதணி சிறப்பற விளையாடி வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.



நன்றி

இ.றொகான் ராஜசிங்கம்

# பயிற்றுவிப்பாளர் உள்ளத்திலிருந்து

தமிழீழ தேசிய அணி ஒன்று முதற்தடவையாக வெளிநாடு சென்று போட்டியிட உள்ளதை இட்டு பயிற்றுவிப்பாளர் என்றரீதியில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். முதலாவது தமிழீழத் தேசிய அணியின் பயிற்றுவிப்பாளர் என்றரீதியில் நான் பெருமை அடைவதுடன் இச்சந்தர்ப்பத்தினை எனக்கு வழங்கிய தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு.பாப்பா அவர்களிற்கு இவ்விடத்தில் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஒரு தேசிய அணிக்கான பயிற்றுவிப்பாளர் தகுதியுடன் நான் இருந்த போதும் எனது சகோதரர்களின் வளர்ச்சிக்கு ஏதும் செய்ய முடியாதிருந்த வேளையில் வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத்துறைத் திட்டமிடல் அலுவலர் திரு.இ. றொகான் ராஜாசிங்கம் அவர்கள் மூலமாக எனது மண்ணுக்கு ஒரு அளப்பரிய சேவை செய்ய முடிந்ததை இட்டு நான் திருப்தியடைகின்றேன். இதேவேளை வீராங்கனைகளை எனது தொழில் இடமான மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் தங்கி பயிற்சியினை மேற்கொள்ள அனுமதி அளித்த எமது பணிப்பாளர் திரு.சுனில் ஜெயவீர அவர்களிற்கும், இளைஞர் சேவைகள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான ஜோன்சன் பெர்ணான்டோ அவர்களிற்கும் முதற்கண் எனது நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன். உணவு மற்றும் பல்வேறு உதவிகளை வழங்கிய விளையாட்டு அமைச்சர் அவர்களிற்கும், மேலும் பல்வேறு வழிகளில் பல உதவிகளை வழங்கிய காணி அமைச்சர் அவர்களிற்கும் இவ்வேளையில் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன். எனக்கு இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தினைத் தந்தவர்களிற்கு மீண்டும் எனது நன்றிகளைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் முதலாவது தேசிய அணியான வலைப்பந்தாட்ட அணியில் பல்வேறு மாவட்டங்களைப் பிரதிநிதிப்படுத்தி எமது தெரிவில் இடம் பெற்றுள்ள இவர்களிடம் தனிப்பட்ட பல திறமைகள் உள்ளடங்கி இருப்பதனைக் கண்டு நான் வியந்துள்ளேன். இவர்களுக்கு தற்போது போல் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சியினைத் தொடர்ந்து பெறுவார்களாயின் இவர்களது திறமைகள் மேன் மேலும் வெளிப்பட்டு ஓர் திறமை வாய்ந்த அணியாக உலக அரங்கில் மிளிர்வார்கள் என்பதில் ஐயமில்லை. மேலும் இன்று ஓர் புது உத்வேகத்துடன் புறப்படும் இவர்கள் இப்போட்டியில் வெற்றி பெறுவதுடன் மேன்மேலும் வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நன்றி

ரதிகலா ஆனந்தவடிவேல்

# அணித் தலைவியின் செய்தி

வடக்கு கிழக்கு மாகாணத் தேசிய வலைப்பந்தாட்ட அணியைப் பொறுத்த வரையில் இலண்டனில் நடைபெறவுள்ள எட்டாவது தமிழர் தேசிய விளையாட்டுவிழாவிற்குப் பங்குபற்றச் செல்வதென்பது எமது அணிக்குக் கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பமாகும். ஏனெனில் இதுவரை காலமும் எமது நாட்டில் சூழ்ந்திருந்த போர்மேகம் காரணமாக எமது வளர்ச்சி குன்றியே காணப்பட்டது. எமது திறமைகள் வெளி உலகிற்கு தெரியாததாகவே இருந்து வந்தது. எம்மிடம் உள்ள வசதிகளைக் கொண்டே நாம் எங்களை வளர்த்துக் கொண்டோம். மாகாணப் போட்டிகள், மற்றும் தேசியப் போட்டிகளில் பங்கு பற்றுவதென்பதே மிகவும் கடினமாகவே இருந்தது. இன்றைய சமாதானச் சூழ்நிலையானது இத்தனை காலமும் இலைமறைகாயாக இருந்து வந்த எமது திறமைகளை வெளிக்கொணர்வதற்கு ஏதுவாக உள்ளது.

இலண்டன் செல்லவுள்ள எமதணியினருக்கு இச்சந்தர்ப்பம் ஓர் அரிய வாய்ப்பாகும். மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் தங்கிப் பயிற்சி பெற்ற நாம் ஒவ்வொருவரும் பிரதேசம், மாவட்டம் என்ற நிலைகளைக் கடந்து தமிழர்களது ஒரு தேசிய அணி என்ற உணர்வுடனே செயற்படக் கூடியதாக இருந்தது. பயிற்சிகளை மேற்கொண்ட போது விமானப்படை அணி, கடற்படை அணி, பாடசாலை அணி, களுத்துறை மாவட்ட அணி என்பவற்றுடன் பல சினேக பூர்வமான போட்டிகளில் பங்கு பற்றினோம். இதன் மூலம் பல்வேறுபட்ட அணிகளுடன் விளையாடும் போது அவர்களது திறமைகள் நுட்பங்கள் தந்திரங்கள் போன்றவற்றை அறிந்து கொள்ள முடிந்தது.

விளையாட்டு என்பது பலரை ஒன்றிணைக்கும் ஒரு செயற்பாடாகும். அதற்கு இன, மத, மொழி என்பன ஒரு தடையாக அமையாது என்பதனை இந்தச் சந்தர்ப்பம் மூலம் அறிந்து கொண்டோம். மொழி வேறுபட்ட பல அணிகளுடன் நாம் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டோம். இதற்கெல்லாம் மேலாக நாம் ஓர் சிறந்த பயிற்றுவிப்பாளரைப் பெற்றுக் கொண்டதுதான். அவர் மூலமாக நாம் அறிந்த விடயங்கள் ஏராளமாகும்.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தித்தந்தவர்கட்கும் நாம் நன்றி கூறுவதுடன் எமது பயிற்றுவிப்பாளர், முகாமையாளர், உதவி முகாமையாளர் என்போருக்கும் இவ்வேளையில் எமது அணி சார்பாக நன்றி கூறுகிறோம். மேலும் இவ்வாறான சந்தர்ப்பங்கள் இத்துடன் நின்றுவிடாது இனிவரும் காலங்களிலும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்பதனையும் இச்சந்தர்ப்பத்தில் கூறவிரும்புகிறேன். எமது அணி அனைவர் மத்தியிலும் ஓர் சிறந்த அணியாக இனம் காணப்படும் என்ற நம்பிக்கையில்.

இ.நிஷாந்தி

திரு.இ. றொகான் இராயசிங்கம்
(அணி முகாமையாளர்)

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் பின்பு விளையாட்டு அலுவலராகத் தெரிவாகினார். 1986 - 88 காலப்பகுதியில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்திலும், 1988 - 95 காலப்பகுதியில் தெல்லிப்பழை பிரதேசத்திலும், 1996ல் இருந்து தற்போது வரை வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத்துறைத் திட்டமிடல் அலுவலராகவும் கடமைபுரிந்து வருகின்றார்.

பாடசாலையில் கல்விபயிலும் காலங்களில் ஹொக்கி, உதைபந்து, துடுப்பாட்டம், மெய்வல்லுனர் போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர். 1976ல் ஹொக்கி அணியின் தலைவராகவும், 77ல் உதைபந்தாட்ட அணித்தலைவராகவும், துடுப்பாட்ட அணியின் உபதலைவராகவும் இருந்து பாடசாலை அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார். 1977ல் சிறந்த துடுப்பாட்ட வீரராகத் தெரிவானார். 1978ல் அகில இலங்கை பாடசாலை மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் தனது பாடசாலை அணியின் தலைவராக இருந்து சிறப்புற விளையாடி அவ்வணி Champian ஆக வருவதற்கு உறுதுணையாக இருந்தவர். இதே காலப்பகுதியில் அகில இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கி அணிக்கான தெரிவணியில் இடம் பெற்றார். அதே போல் தேசிய இளைஞர் உதைபந்தாட்டத் தெரிவணியிலும் இடம் பெற்றார்.

தெல்லிப்பழை கிறாஸ்கொப்பேர்ஸ் விளையாட்டுக்கழக அங்கத்தவரான இவர் உதைபந்தாட்டம், ஹொக்கி, துடுப்பாட்டம், மெய்வல்லுனர் போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அக்கழக அணிகளின் வெற்றிக்கு வழிவகுத்தவர்.

1986ல் விளையாட்டு அலுவலராகக் கடமை ஏற்ற பின்பு 1987ல் தேசிய விளையாட்டுக்கள் விஞ்ஞான நிறுவனத்தில் விளையாட்டு டிப்ளோமா கற்கை நெறியிணை (Diploma in Sports - Sri Lanka) பூர்த்தி செய்தார், பின்பு உதைபந்தாட்டம், மெய்வல்லுனர் என்பவற்றில் தகுதி வாய்ந்த பயிற்றுனராகப் பதவி உயர்வு பெற்றார். 1994ல் மெய்வல்லுனர் விசேட கற்கை நெறியினை இலங்கையிலும், 1996ல் பிறேசிலிய உதைபந்தாட்ட டிப்ளோமா வினை (Diploma in Brasilian Football) பிறேசிலிலும், 1998ல் பயிற்சியாளர்களுக்கான டிப்ளோமாவினை பயிற்சியினை (Diploma in Coaching and Training) இந்தியாவிலும் பூர்த்தி செய்தார்.

தெல்லிப்பழையில் விளையாட்டு அலுவலராக இருந்த காலப்பகுதியில் வலைப்பந்தாட்ட அணி 1991 - 96 வரை தொடர்ந்து சம்பியனாகத் தெரிவானது. அதே போல் மெய்வல்லுனர் ஆண், பெண் உதைபந்தாட்டம், ஹொக்கி என்பனவும் வெற்றிகளைப் பெற்றுவந்தன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

விளையாட்டுத் திட்டமிடல் அலுவலராக இருந்த காலப்பகுதியில் வடக்கு கிழக்கு மாகாண உதைபந்தாட்ட அணியினைப் பயிற்றுவித்தார். இவ்வணி 1998, 2001, 2002ம் ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் 3ம் இடத்தினைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

உதைபந்தாட்ட நடுவர், வலைபந்தாட்ட மத்தியஸ்தர், துடுப்பாட்ட மத்தியஸ்தர் பரீட்சைகளில் சித்தி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



## ரதிகலாதேவி ஆனந்தவடிவேல்
[பயிற்றுவிப்பாளர்]

வடமராட்சியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் வட இந்து மகளிர் கல்லூரியில் உயர்தரத்தில் கணிதப்பிரிவில் கல்வி பயின்றவர். பின்பு இளைஞர் சேவைகள் மன்றத்தில் இணைந்து கரப்பந்து, வலைப்பந்து என்பவற்றை முறையாகப் பயின்று தற்போது அங்கேயே இளைஞர் சேவை அதிகாரியாக விளையாட்டுப் பிரிவில் சேவையாற்றுகிறார்.

பாடசாலையில் கல்விபயிலும் காலத்தில் 15, 17, 19 வயது அணிகளில் விளையாடியது மட்டுமல்லாது அணித் தலைவியாகவும் விளங்கினார். அது மட்டுமல்லாது மெய்வல்லுனர் உப தலைவியாகவும் விளங்கினார். 19 வயது பிரிவில் National Champian அணி வீரர் ஆவார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அங்கத்தவராக இணைந்து கொண்டதன் பின் தனது திறமைகளை மிக துல்லியமாக வெளிக்கொணர்ந்ததன் விளைவாக அவரது அணி 89, 90ம் ஆண்டுகளில் தேசிய வலைப்பந்தாட்டப் போட்டியில் 1ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் அகில இலங்கை வலைப்பந்தாட்ட சங்க போட்டியிலே 89, 90ம் ஆண்டுகளிலே 2ம் இடத்தினை பெற்றுக் கொண்டதுடன் கம்பக மாவட்ட விளையாட்டு விழாவிலே 88, 89, 90, 92, 93ம் ஆண்டுகளிலே வெற்றிக் கேடயத்தினை பெற்றுக் கொண்டனர். அத்துடன் Track Master Sports Clubல் இணைந்து தேசிய வலைப்பந்தாட்ட போட்டியில் 95ல் இரண்டாம் இடத்திணையும் 97ல் கொழும்பு மாவட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார். விளையாட்டு வீராங்கனையாக மட்டுமன்றி தனது திறனை ஏனைய வீரர்களுக்கும் வழங்கும் முகமாக வலைப்பந்தாட்டம் சம்பந்தமாக பல கற்கை நெறிகளையும் கற்று தன்னை ஓர் சிறந்த பறிற்றுனராகவும் வளர்த்துக் கொண்டு தனது சேவையை தொடருகின்றார்.

தன்னை ஒரு பயிற்றுனராக வளர்த்துக்கொள்வதற்காக அவர் மேற்கொண்ட கற்கை நெறிகள், நியூசிலாந்து வலைப்பந்தாட்ட சங்கத்தினால் பயிற்றுனர் தரத்திற்கு நடத்தப்பட்ட 1ம், 2ம் தர கற்கை நெறியை கற்றுக் கொண்டதுடன் ஜப்பானிலும் 10 மாதங்கள் தனது அடிப்படை உடற்பயிற்சி கற்கை நெறியை கற்றுக்கொண்டார். அவுஸ்ரேலிய வலைப்பந்தாட்ட சங்கமும் ஆசிய வலைப்பந்தாட்ட சம்மேளனமும் இணைந்து நடாத்திய பயிற்றுனருக்கும், நடுவருக்குமான கற்கை நெறியினை புதுடில்லியில் மேற்கொண்டார். 2002ம் ஆண்டின் இங்கிலாந்து வலைப்பந்தாட்ட சங்கத்தின் AENA Level 3 Course மேற்கொண்டார். அப்பயிற்சி நெறியில் 10 பேரில் சிறந்த பயிற்றுவிப்பாளராக தெரிவு செய்யப்பட்டார். அவுஸ்ரேலிய வலைப்பந்தாட்ட சங்கத்தின் பயிற்றுனர், நடுவருக்கான கற்கை நெறியை இலங்கையில் மேற்கொண்டார். அவுஸ்ரேலியாவின் தேசிய வலைப்பந்தாட்ட பயிற்றுனர் ஆகிய Pamala Bahan ஆல் இலங்கையின் சிறந்த பயிற்றுனர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சிநெறியில் எட்டு பேரில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டார். தேசிய விஞ்ஞான விளையாட்டு நிறுவனத்தின் வலைப்பந்தாட்ட பயிற்றுனர் நெறியினை 2001ல் மேற்கொண்டு அப்பயிற்சி நெறியினை மேற்கொண்டோரில் முதலாவதாக தெரிவு செய்யப்பட்டார் (Batch Top). இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் வலைப்பந்தாட்ட பயிற்றுனரின் Inter Medium Training Course ஐ 97ல் மேற்கொண்டார். இலங்கையின் வலைப்பந்தாட்ட அபிவிருத்திக்கென அமைக்கப்பட்ட சிறு குழுவில் முக்கியமானவராக இவர் காணப்பட்டார். வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தி பெற்று Gold Award Umpires பட்டத்தினை 2000ம் ஆண்டு பெற்றார்.

இலங்கையின் இளைஞர் மன்றத்தினாலும் விளையாட்டுக் கழகத்தினாலும் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலை நடாத்தினார். தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் விசேட வலைப்பந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளராக இருந்து அவ்வணி 1997ல் உள்ளக கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற வழி வகுத்ததுடன் 21 வயதுக்குட்பட்டோருக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் 98ல் வெற்றி பெறவும் வழியமைத்தார்.

99ல் Air Force, அணியினரின் பயிற்றுனராக இருந்து மேல்மாகாண போட்டியில் அவ்வணி வெற்றியினை பெறவும் வழியமைத்தார். 4 வருடமாக குற்றப்புலனாய்வுத்துறையின் வலைப்பந்தாட்ட அணியில் கடமையாற்றினார். அத்துடன் இலங்கை வங்கியின் மகரகம கிளை அணியினருக்கும், மகரகம Dental College அணியினருக்கும், மகரகம C.K.T Garment அணியினருக்கும் பயிற்று்னறாகக் கடமையாற்றியுள்ளார். இவரின் கீழ் பயிற்சி பெற்ற 5 வீராங்கனைகள் கனடாவில் நடைபெற்ற உலக இளைஞர் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்கு பற்றினர். அத்துடன் NYSC அணியில் பயிற்சி பெற்ற 5 வீராங்கனைகள் தேசிய வலைப்பந்தாட்ட குழுவில் 94ம் ஆண்டில் இடம் பெற்றனர். 4 வீராங்கனைகள் பொதுநல வாய நாடுகளுக்கிடையில் 2002ல் இங்கிலாந்தில் நடைபெற்ற சுற்றுப்போட்டியில் இடம் பெற்றனர். T.S.S.A Canada வில் நடைபெற்ற போட்டியில் பங்கு பற்றிய இங்கிலாந்து தமிழ் பாடசாலை விளையாட்டு சங்க அணியின் பயிற்றுனராக 2002ல் கடமை ஆற்றி அவ்வணி அச்சுற்று போட்டியில் வெற்றி பெற வழிவகுத்தார். 2002ல் U.Kல் யாழ்ப்பாண இந்து மகளிர் கல்லூரியில் (U.K) பயிற்றுனறாக இருந்து அவ்வணி கழகங்களின் சுற்றுப்போட்டியில் 2ம் இடத்தை பெற வழி வகுத்தார். அத்துடன் தற்போது London ற்கு வருகை தந்துள்ள வடக்கு கிழக்கு தேசிய அணியின் பயிற்றுனராக கடமை புரிந்து கொண்டு தனது சேவையினை பயிற்றுனராகவும் நடுவராகவும் ஒருங்கிணைப்பாளராகவும் வலைப்பந்தாட்ட துறைக்கு தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கின்றார்.



நிஷாந்தி இராஜரட்ணம்
[அணித்தலைவி]

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பிறந்த இவர் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்று க.பொ.த (உ/த) வர்த்தகப் பரிவில் 2002ல் பரீட்சை எழுதியுள்ளார். பாடசாலை மட்டத்தில் வலைப்பந்தாட்ட அணியில் இடம் பெற்றுத் திறமையாக விளையாடியவர். 1999, 2000, 2001ம் ஆண்டுகளில் 17, 19 வயதிற்குட்பட்ட அணியின் அணித் தலைவியாக இருந்தவர். மத்திய நிலை ஆட்டக்காரராகவும் கோல் தடுப்பாளராகவும் (G.D) விளையாடியவர். 200 மீற்றர், 400 மீற்றர், உயரம் பாய்தல் போன்ற மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி வெற்றிகளைப் பெற்றவர்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவரான இவர் 2001ம் ஆண்டு யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்ட அணியின் ஒரு வீராங்கனையாக இருந்து சிறப்பாக விளையாடி மாகாண அணிக்குத் தெரிவானார். 2002ம் ஆண்டு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணியின் ஒரு வீராங்கனையாக விளையாடி மாகாண அணியிலும் சிறப்பாக விளையாடியவர். 21 வயதிற்குட்பட்ட தேசிய வலைப்பந்தாட்ட அணித்தெரிவதற்காக 2002ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு இறுதிச் சுற்றுவரை சிறப்பாக விளையாடி அணித்தெரிவில் இடம் பெற்றார்.

தற்போது இலண்டன் செல்லவுள்ள வடக்கு கிழக்கு தேசிய வலைப்பந்தாட்ட அணியின் தலைவியாக உள்ளார்.

கழகங்களுக்கூடான கூடைப்பந்தாட்டத்தில் அதிகளவான போட்டிகளில் சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டவர். பாடசாலையில் விளையாட்டுத்துறைத் தலைவியாக விளங்கினார். 2003ம் ஆண்டு நல்லூர் பிரதேச அணியில் விளையாடி சிறப்பாட்டக்காரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். பாடசாலை மட்ட வலைப்பந்தாட்டத்தில் பங்கு பற்றி வலயம் முதல் மாவட்டம் வரை அணி வருவதற்க்காக ஒத்துழைப்பு வழங்கினார்.



## சந்திரமதி தவராஜா

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவியான இவர் 1993ம் ஆண்டு கலைப்பிரிவிற் பயின்று பல்கலைக் கழக அனுமதி பெற்று அங்கு தமிழில் சிறப்புக் கலைமாணி பட்டம் பெற்று தற்போது விளையாட்டு அலுவலராக சங்கானை பிரதேச செயலகத்தில் கடமை புரிகின்றார்.

தனது கல்லூரி பருவத்தில் 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகளில் சிறப்பாக விளையாடினார். 1991ம் ஆண்டு 19 வயதுப் பிரிவு அணியின் தலைவராக இருந்து யாழ் மாவட்டத்தில் தனது பாடசாலை 2ம் இடம் பெறுவதற்குச் சிறப்பாக விளையாடிப் பலரது பாராட்டுக்களைப் பெற்றவர். 19 வயதுப் பிரிவில் மெய்வல்லுனர் போட்டியில் குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றார். 1992ம் ஆண்டு பாடசாலையின் மெய்வல்லுனர் தலைவியாகவும், 89, 91ம் ஆண்டுகளில் சிறந்த வலைப்பந்தாட்ட வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

பாடசாலை மட்டத்தில் மட்டுமன்றித் தனது பல்கலைக்கழக வாழ்விலும் பல விளையாட்டுக்களில் பங்குபற்றினார். 97, 98, 99, 2000ம் ஆண்டுகளில் பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட அணியின் வீராங்கனையாக இருந்த இவர் 97ம் ஆண்டில் சிறந்த வலைப்பந்தாட்ட **வீராங்கனை**யாகத் தெரிவாகினார். 98ல் அணியின் உபதலைவியாகவும் **99ல்** அணியின் தலைவியாகவும் விளாங்கினார். மெய்வல்லுனர் நிகழ்வுகளில் பங்குபற்றி

2000ம் ஆண்டு மெய்வல்லுனர் தலைவியாகவும் விளங்கிய இவர் கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், போன்ற அணிகளிலும் சிறந்த வீராங்கனையாக விளங்கினார். பல்கலைக்கழகத்தில் சகல துறைகளிலும் சிறந்து ஒருவருக்கு ஒவ்வொர் வருடமும் வழங்கப்பட்டு வருவது துரைராஜா நினைவுப் பதக்கமாகும். தனது திறமைகளை அனைத்துத் துறைகளிலும் வெளிக்கொணர்ந்ததன் மூலம் 2001ம் ஆண்டின் சிறந்த மாணவியாகத் தெரிவு செய்யப்பட்டு துரைராஜா நினைவுப் பதக்கத்தினை தனதாக்கிக் கொண்டார்.

தெல்லிப்பழை கிறாஸ்கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவரான இவர் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியில் இடம் பெற்று 90, 91, 92, 93, 94, 95, 99ம் ஆண்டுகளில் யாழ் மாவட்டத்தில் சம்பியனாகத் தெரிவாவதற்கு இவர் உறுதுணையாக இருந்தார். அத்துடன் பல சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றிச் சிறந்த வீராங்கனையாகப் பல தடவைகள் தெரிவானவர். மெய்வல்லுனர் போட்டிகளில் குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றி மாவட்ட மட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்ற இவர் 1991ம் ஆண்டு குண்டெறிதல் நிகழ்ச்சியில் 7.91 M தூரம் எறிந்து புதிய சாதனையை நிலை நாட்டியவர்.

1990ம் ஆண்டு யாழ் மாவட்ட அணியின் ஒரு வீராங்கனையாக விளங்கினார். 1998ல் வடக்கு கிழக்கு மாகாண போட்டியில் முதலிடம் பெற்ற யாழ் மாவட்ட அணியின் ஒரு வீராங்கனையாவார். 1998ல் இலங்கைத் தேசிய அணித்தெரிவில் இடம் பெற்றார். 2002ம் ஆண்டு யாழ் மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்க அணி கொழும்பில் நடந்த சுற்றுப் போட்டியில் பங்கு பற்றிச் சிறப்பாக விளையாடிப் பலரது பாராட்டுக்களையும் பெற்ற அணியின் தலைவியாகவும் இவர் விளங்கினார்.

## தயாளினி செல்வராஜா



இவர் யாழ். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயின்று 2001ம் ஆண்டு வர்த்தகப்பிரிவில் பரீட்சை எடுத்தவர். பாடசாலை மட்ட வலைப்பந்தாட்ட அணியின் வீராங்கனையாகத் திகழ்ந்தவர். 1999ம் ஆண்டு 19 வயதிற்குட்பட்ட அணி மாகான மட்டத்தில் 1ம் இடம் பெற்ற போது அவ்வணியின் ஓர் வீராங்கனையாக இருந்து சிறப்புற விளையாடி அணியின் வெற்றிக்கு வழிவகுத்தவர். ஆரம்ப காலந்தொட்டு மெய்வல்லுனர் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றிகளைப் பெற்ற இவர் 19, 21 வயதிற்குட்பட்டோர் போட்டியில் 200 மீற்றர், 400 மீற்றர், உயரம் பாய்தல் போட்டிகளில் மாவட்டம், மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று அப்பிரிவுகளின் சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டார். 2001ம் ஆண்டு 21 வயதிற்குட்பட்டோருக்கான உயரம் பாய்தல் நிகழ்வில் மாகாண மட்டத்தில் புதிய சாதனையை (1.45 M) நிலை நாட்டி தேசிய மட்டப் போட்டியில் பங்கு பற்றி 4 நான்காம் இடத்தினைப் பெற்ற இவர் 2001ம் ஆண்டு பாடசாலை மட்ட மெய்வல்லுனர் தலைவியாகத் தெரிவானார்.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அங்கத்துவராக உள்ள இவர் 200M, 400M, உயரம் பாய்தல் நிகழ்வுகளில் பங்கு பற்றி வெற்றி பெற்று யாழ். மாவட்டத்தின் சார்பில் மாகாணமட்டப் போட்டிகளிலும் பங்கு பற்றி வெற்றி பெற்றவர். 2001ம் ஆண்டில் 400M நிகழ்வில் 1 : 05 செக்கனில் ஓடி புதிய சாதனையை நிலைநாட்டினார். பருத்தித்துறை பிரதேச செயலக வலைப்பந்தாட்ட அணியில் இடம் பெற்று யாழ். மாவட்டத்தில்

2ம் இடம் பெற்ற அணியின் வீராங்கனையான இவர் 2002ம் ஆண்டு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணியில் இடம் பெற்றார். களுத்துறையிலிடம் பெற்ற சமாதான விளையாட்டு விழாவில் பங்கு பற்றிய யாழ். மாவட்ட அணியின் உபதலைவியாக விளங்கினார். அதே போல் கரப்பந்தாட்டம், எல்லே போன்ற போட்டிகளிலும் யாழ் மாவட்ட அணிக்காக விளையாடியவர். எல்லே, கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற அணிகளின் பிரதேச செயலக அணித் தலைவியாக விளங்கியவர். 2002ம் ஆண்டு எல்லே போட்டியில் யாழ் மாவட்ட அணி 2ம் இடம் பெற்ற போது சிறப்பாக விளையாடி மாகாண அணியில் இடம் பெற்று தேசிய போட்டியிலும் பங்குபற்றினார். வலைப்பந்தாட்டச் சங்க யாழ். மாவட்ட அணியில் தெரிவாகி 2002ல் சிறப்பாக விளையாடியவர்.

21 வயதிற்குட்பட்ட தேசிய வலைப்பந்தாட்ட அணிக்காக 2002ம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டார்.



மாலினி மகாலிங்கம்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி கற்று 2003ம் ஆண்டு க.பொ.த உ/த வர்த்தகப் பிரிவில் பரீட்சை எழுதி உள்ளார். சிரேஷ்ட மாணவ தலைவியான இவர் பாடசாலை நாட்களிலே பல துறைகளிலும் தனது திறனை வெளிப்படுத்தினார்.

பாடசாலை மட்டத்தில் 15, 17, 19 வயதுப் பிரிவுகளில் வலைப்பந்தாட்ட அணியின் ஒரு வீராங்கனையாக இருந்து அணியின் வெற்றிக்கு உதவியுள்ளார். 1998ல் 15 வயதுப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தினையும் மாகாணமட்டத்தில் 3ம் இடத்தினையும் பெற்ற அணியின் தலைவியாகவும் விளங்கினார். 1999ல் 17 வயதுப்பிரிவில் மாவட்டம், மாகாணமட்டம் என்பவற்றில் 1ம் இடம் பெற்ற அணியின் ஒரு வீராங்கனையாவார். 2001ம் ஆண்டு 19 வயதுப் பிரிவு போட்டியில் மாவட்டம், மாகாணமட்டங்களில் முதலிடம் பெற்ற அணியில் சிறப்பாக விளையாடித் தனது பாடசாலையின் சிறந்த வீராங்கனையாகத் தெரிவாகினார். 2002ம் ஆண்டு மாவட்டத்தில் 1ம் இடமும் மாகாணத்தில் 2ம் இடமும் பெற்ற அணியின் வீராங்கனையாகவும் விளங்கினார். மெய்வல்லுனர் நிகழ்வில் 15 வயதுப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் நீளப்பாய்தல் நிகழ்வில் 2ம் இடம் பெற்றவர்.

யூனியன்ஸ் விளையாட்டுக் கழக அங்கத்தவரான இவர் 2001ம் 2002ம் ஆண்டுகளில் பல்கலைக்கழக வலைபந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் அணி வெற்றிக்கேடயத்தை பெற பங்களித்ததுடன் சிறந்த W.A ஆகவும் தெரிவுசெய்யப்பட்டார். அத்துடன் 2001ம் ஆண்டு யாழ் மாவட்ட அணிக்காக தெரிவு செய்யப்பட்டு விளையாடி மாகாண அணித்தெரிவில் இடம்பெற்று தேசியமட்டப் போட்டிகளிலும் பங்குபற்றினார்.



## பிரிந்தா சோமசுந்தரம்

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவியான இவர் 2003 க.பொ.த உ/த வர்த்தகப் பிரிவில் கல்வி பயில்கின்றார். பாடசாலை வலைப்பந்தாட்ட அணியின் ஒரு வீராங்கனையாவார். 1999ல் 15 வயதுப் பிரிவில் மாகாணத்தில் 2ம் இடம் பெற்ற அணியின் ஒரு வீராங்கனையாவார். 2000ம் ஆண்டில் அணித்தலைவியாக விளையாடி மாவட்டத்தில் 1ம் இடம் பெறுவதற்கு வழிவகுத்தவர். 2001, 2002ம் ஆண்டுகளில் 17 வயதுப் பிரிவில் மாகாணமட்டத்தில் முறையே 2ம், 1ம் இடம் பெற்ற அணியின் வீராங்கனையாகவும் 2003ல் 19 வயதுப் பிரிவில் மாகாணத்தில் முதலிடம் பெற்ற அணியின் ஒரு வீராங்கன்னையாகவும் விளையாடினார்.

கல்வளை விளையாட்டுக்கழக அங்கத்தவரான இவர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியில் இடம் பெற்று 2000, 2001, 2002ம் ஆண்டுகளில் அவ்வணி மாவட்டத்தில் வெற்றிபெறுவதற்கு வழிவகுத்தவர். 2002ம் ஆண்டு யாழ் மாவட்ட அணியில் இடம் பெற்றுச் சிறப்புற விளையாடி மாகாண அணிக்குத் தெரிவாகித் தேசிய போட்டியில் சிறப்புற விளையாடியவர்.



சங்கீதா திருச்செல்வம்

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் மாணவியான இவர் பாடசாலை மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் 1998, 1999ம் ஆண்டுகளில் 15 வயதுப் பிரிவுப் போட்டிகளில் மாகாண மட்டப் போட்டியில் 2ம் இடம் பெற்ற அணியின் ஒரு வீராங்கனையாகவும், 17 வயதுப் பிரிவுப் போட்டியில் 2000ம் ஆண்டு மாவட்டத்தில் 1ம் இடம் பெற்ற அணியினதும் 2001ம் ஆண்டு மாகாணப் போட்டியில் 2ம் இடம் பெற்ற அணியினதும் வீராங்கனையாக விளங்கிச் சிறப்பாக விளையாடினார். 19 வயதுப் பிரிவில் 2002, 2003ம் ஆண்டுகளில் மாகாணத்தில் 1ம் இடம் பெற்ற அணியின் தலைவியாக இருந்து அணி வெற்றி பெறச் சிறப்பாக விளையாடினார்.

கல்வளை விளையாட்டுக் கழக அங்கத்துவராக உள்ள இவர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக வலைப்பந்தாட்ட அணி 2000, 2001, 2002ம் ஆண்டுகளில் யாழ் மாவட்டத்தில் முதலாமிடம் பெற்ற அணியில் சிறப்புற விளையாடி 2001, 2002ம் ஆண்டுகளில் யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட அணிக்குத் தெரிவானார். 2002ம் ஆண்டு மாவட்ட அணியின் உபதலைவியாகவும் வடக்கு கிழக்கு மாகாண அணியின் உபதலைவியாகவும் விளங்கிய இவர் பல சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றிச் சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார். குறிப்பாக 2003ம் ஆண்டு நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாண மட்டப் போட்டியில் சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டார்.



ராதா ஆனந்தகிளி

இவர் தனது ஆரம்பக் கல்வியை மயிலிட்டி கலைமகள் வித்தியாலத்திலும், இடப்பெயர்வின் பின் வல்வை மகளிர் மகாவித்தியாலயத்திலும் மேற் கொண்டார். ஆரம்ப காலங்களில் மெய்வல்லுனர் நிகழ்வுகளில் பங்குபற்றி பாடசாலை மட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்றவர். பின் வலைபந்தாட்ட அணியிலும் இடம்பெற்றார்.

கிளிநொச்சியில் இடம் பெயர்ந்து வாழ்ந்து வரும் வேளையில் கிளிநொச்சி மாவட்ட அணிக்காக விளையாடியவர்.



கமிலா குணரட்ணம்

மன்னார் உயிலங்குளம் றோ.க கல்லூரியில் க.பொ.த உ/த கல்வி கற்பவர். இவர் பாடசாலை வலைப்பந்தாட்ட அணியின் ஒரு வீராங்கனையாவார். 15 வயதுப் பிரிவில் 1997, 1998ம் ஆண்டுகளில் மன்னார் மாவட்டத்தில் 2ம் இடம் பெற்ற அணியின் ஒரு வீராங்கனையாவார். 17 வயதுப் பிரிவில் 1999, 2000ம் ஆண்டுகளில் 2ம் இடம் பெற்ற அணியினதும் 2001, 2002ல் 19 வயதுப் பிரிவு அணியினதும் ஒரு வீராங்கனையாக விளையாடி அணியின் வெற்றிக்கு உறுதுணையாக விளங்கியவர்.

கள்ளி கட்டைக் காட்டு விளையாட்டுக் கழக அங்கத்தவரான இவர் மன்னார் மாவட்ட அணியில் இடம் பெற்றுப் பல போட்டிகளில் பங்கு பற்றியவர். 2002ம் ஆண்டு மாகாணப் போட்டியில் மன்னார் மாவட்டம் 2ம் இடம் பெற்ற அணியில் சிறப்பாக விளையாடி மாகாண அணிக்குத் தெரிவாகித் தேசிய போட்டியில் பங்கு பற்றியவர் பாடசாலை மட்டத்தில் மெய்வல்லுனர் போட்டிகளில் பங்கு பற்றி பல வெற்றிகளைப் பெற்றவர். 2003ம் ஆண்டு நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாணமட்டப் போட்டியில் மன்னார் மாவட்ட அணிக்காக விளையாடி அவ்வணி வெற்றிபெறச் செய்தவர்.



நிர்மலா காத்தமுத்து

வந்தாறு மூலை மத்திய மகாவித்தியாலயத்தில் 2005 க.பொ.த உ/த கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவியாவார். பாடசாலை மட்ட வலைப்பந்தாட்ட அணியில் மட்டுமல்லாது எல்லே அணியிலும் இடம் பெற்று அணிக்காகத் திறம்பட விளையாடி மாவட்டத்தில் தனது பாடசாலை அணி வெற்றிபெற வழிவகுத்தவர்.

வானவில் விளையாட்டுக் கழக அங்கத்தவரான இவர் மட்டக்களப்பு மாவட்ட அணியில் இடம் பெற்று அணிக்காகச் சிறப்புற விளையாடுபவர்.

பாடசாலை மட்ட வலைபந்தாட்டப் போட்டிகளில் சிறப்புற விளையாடி 17, 19 வயதுப்பிரிவுகளில் மாவட்டத்தில் வெற்றி பெற்று மாகாணப் போட்டிகளில் பங்கு பற்றிச் சிறப்பாக விளையாடியவர். 19 வயதுப் பிரிவு அணியின் தலைவியாக இருந்து மாகாணத்தில் 3ம் இடம் பெறுவதற்கு சிறப்பாக விளையாடியவர். எல்லே போட்டியில் மாவட்டச் சம்பியனாக வந்து மாகாணத்தில் சம்பியனாகத் தெரிவாகி தேசிய போட்டியில் பங்கு பற்றினார்.

## பூமகள் கந்தசாமி



அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் இடம் பெயர்ந்து முல்லைத்தீவில் வசித்து வருபவர். சுப்பராங் விளையாட்டுக் கழக அங்கத்துவரான இவர் முல்லைத் தீவு மாவட்ட அணியின் தலைவியாகவும் இருந்தவர். 2002ம் ஆண்டு மாகாணப் போட்டியில் பங்கு பற்றி சிறப்பாக விளையாடி மாகாண அணிக்குத்தெரிவாகித் தேசியப் போட்டியிலும் பங்கு பற்றியவர்.

மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் எறிதல் நிகழ்வுகளில் பங்குபற்றி மாவட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்ற இவர் மாகாணப் போட்டியில் குண்டெறிதல் நிகழ்வில் 3ம் இடம் பெற்றவர்.

இவர் பாடசாலையில் பல விளையாட்டுக்களில் திறமைகளை வெளிப்படுத்தினார். பாடசாலை மட்டத்தில் 15, 17, 19 வயதுப் பிரிவுகளில் வலைப்பந்தாட்ட அணியில் ஒரு வீராங்கனையாக இருந்தவர். அணிக்கு தலைவியாக இருந்தார். இவர் தனது பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டார்.

2003ம் ஆண்டு முல்லைத் தீவு மாவட்ட விளையாட்டுப் போட்டியில் குண்டு எறிதல், ஈட்டி எறிதல், முப்பாய்தல் ஆகிய நிகழ்வுகளில் முதலிடம் பெற்று சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார். வடக்கு கிழக்கு மாகாண வலைப்பந்தாட்டப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட அணிக்காக விளையாடியவர்.

ஆரம்பத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழக அங்கத்தவராக இருந்த இவர் மெய்வல்லுனர் நிகழ்ச்சிகள் பல்வற்றில் வெற்றி பெற்றதுடன் வலைப்பந்தாட்டப் போட்டியிலும் பங்கு பற்றிச் சிறப்பாக விளையாடியவர்.




நித்தியா இராஜரட்ணம்


யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவியான இவர் 2005 க.பொ.த உ/த கலைப்பிரிவு மாணவியாவார் பாடசாலை மட்ட வலைப்பந்தாட்ட அணியில் 15, 17 வயதுப் பிரிவு அணிக்காக விளையாடியவர்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அங்கத்தவரான இவர் ஆரம்ப காலத்தில் கூடைப்பந்தாட்டத்தில் நாட்டம் கொண்டு விளையாடி 2001ம் ஆண்டு யாழ் மாவட்ட அணியில் இடம் பெற்றவர். அதன் பின் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் ஈடுபட்டு மாவட்ட அணிக்குத் தெரிவானவார்.

2002ம் ஆண்டு சமாதான விளையாட்டு விழாவில் யாழ் மாவட்ட அணிக்காக GS ஆக விளையாடியவர். நல்லூர் பிரதேச சபையில் மெய்வல்லுனர் விளையாட்டுக்களில் குண்டெறிதல் 800M, உயரம் பாய்தல் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றியுள்ளார். பாடசாலை பற்மின்றன் அணித்தலைவராக (2002ம் ஆண்டு) இருந்தவர்.


GK
GA






தேசிய அடையாளத்தில், விளையாட்டின் பங்களிப்பும் உயர்வான ஒரு இடத்தைப் பெறவேண்டும்.

- தமிழீழ விளையாட்டுத்துறை